# BSNL ஊழியர் சங்கம்
## தமிழ் மாநிலம்

**சுற்றறிக்கை எண்:43** **தேதி:-08.01.2018**

### ஊதிய மாற்றம் மற்றும் துணை டவர் நிறுவனம் அமைப்பதை எதிர்த்து தீவிரமான போராட்டங்கள் மற்றும் சில செய்திகள்

அன்பார்ந்த தோழர்களே,

08.01.2018 அன்று புது டெல்லியில் கூடிய ALL UNIONS AND ASSOCIATIONS OF BSNL கூட்டம் 3வது ஊதிய மாற்றத்தை அமலாக்கவும், துணை டவர் நிறுவனம் அமைத்ததை திரும்ப பெறுவதை உறுதி செய்யவும் தீவிரமான போராட்டங்களை முடிவு செய்வதற்காக விவாதித்தது. FNTO சங்கத்தின் பொது செயலாளர் தோழர் K.ஜெயபிரகாஷ் தலைமையில் நடைபெற்ற அந்தக் கூட்டத்தில் BSNLEU, NFTE, SNEA, AIBSNLEA, FNTO, BTEU, SEWA BSNL, AIGETOA, BSNL MS, TEPU, BSNL ATM மற்றும் TOA BSNL சங்க தலைவர்கள் பங்கு பெற்றனர். நமது கோரிக்கைகளை வென்றடைவதற்கு போராட்டங்களை தீவிரப்படுத்த கீழ்கண்ட முடிவுகளை ஏகமனதாக எடுக்கப்பட்டன.

**போராட்ட திட்டங்கள்**

1) 30.01.2018 முதல் முழுநாள் சத்யாகிரகத்தை ஐந்து நாட்கள் நடத்துவது. ALL UNIONS AND ASSOCIATIONS OF BSNL தலைவர்கள் டெல்லி காந்தி சமாதியில் 30.01.2018 அன்று 'ஷ்ரதாஞ்சலி' செலுத்தி சத்யாகிரகத்தை துவக்குவது.

2) 30.01.2018 முதல் 'காலவரையற்ற விதிப்படி வேலை'.

3) 28.02.2018 அன்று பெருந்திரள் "சஞ்சார் பவன் நோக்கி பேரணி".

4) ALL UNIONS AND ASSOCIATIONS OF BSNL தலைவர்கள் ஒரு வார காலத்திற்குள் மத்திய தொலை தொடர்பு அமைச்சர் திரு மனோஜ் சின்ஹா, தொலை தொடர்பு துறை செயலாளர் மற்றும் CMD BSNL ஆகியோரை சந்திக்க அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்வது.

5) துணை டவர் நிறுவனம் அமைப்பதை திரும்ப பெறுவதற்கான சட்ட பூர்வமான சாத்தியங்களை கண்டறியும் பொறுப்பினை இந்தக் கூட்டம் SNEA தலைவர் தோழர் G.L.ஜோகி மற்றும் தோழர் பிரகலாத் ராய் GS AIBSNLEA ஆகியோருக்கு வழங்கியது.

6) போராட்டங்களை கண்காணிக்க BSNLEU, NFTE, SNEA மற்றும் AIBSNLEA பொது செயலாளர்களை கொண்ட ஒரு வழிகாட்டும் குழுவை உருவாக்கியது.

7) நமது கோரிக்கைகளுக்கு ஆதரவு திரட்டும் வகையில் 30.01.2018க்குள் அரசியல் கட்சிகள் மற்றும் மத்திய தொழிற்சங்க தலைவர்களை சந்திப்பது.

**கோரிக்கைகள்**

அ) 01.01.2017 முதல் 15% ஊதிய நிர்ணய பலனுடன் கூடிய 3வது ஊதிய மாற்றம், ஓய்வூதிய மாற்றம், 2வது ஊதிய மாற்றக் குழுவில் விடுபட்ட பிரச்சனைகள் ஆகியவற்றை தீர்வு கண்டிடு!

ஆ) துணை டவர் நிறுவனம் அமைப்பதை திரும்ப பெறு!!

இ) ஓய்வு பெறும் வயதை 60லிருந்து 58ஆக குறைக்காதே; VRS திட்டம் தேவையில்லை!!!

**DIRECTOR(HR) உடன் முறையான சந்திப்பு**

வெகு நாட்களாக தேங்கியுள்ள சில முக்கியமான மற்றும் தேங்கியுள்ள பிரச்சனைகள் தொடர்பாக விவாதிக்க DIRECTOR (HR) அவர்களுடன் ஒரு முறையான சந்திப்பு தேவை என BSNL ஊழியர் சங்கம் கோரியிருந்தது. அந்தக் கூட்டம் 08.01.2018 அன்று நடைபெற்றது. நமது சங்கத்தின் சார்பில் நமது பொது செயலாளர் தோழர் P.அபிமன்யு மற்றும் தோழர் சுவபன் சக்கரவர்த்தி Dy.GS ஆகியோரும், நிர்வாகத்தின் சார்பில் திருமிகு சுஜாதா ரே DIRECTOR (HR), திரு கேஷவ் ராவ் GM(Estt), திரு A.M.குப்தா GM(SR), திரு அஷுடோஷ் குப்தா GM (Restg), திரு P.D.சிரானியா GM(CA), திரு S.K.சின்ஹா GM(Admn) மற்றும் திரு சுனில்குமார் GM (FP) ஆகியோர் கலந்துக் கொண்டனர். அந்தக் கூட்டத்தில் கீழ்கண்ட பிரச்சனைகள் விவாதிக்கப்பட்டன:-

1) **ஊதிய மாற்றம் தொடர்பாக விவாதிக்க கூட்டுக் குழு**:- ஊழியர்களுக்கான ஊதிய மாற்றம் தொடர்பாக DPE வழிகாட்டுதல் வெளியிட்டுள்ளதால் ஊதிய மாற்றம் தொடர்பாக விவாதிக்க ஒரு கூட்டுக் குழு உருவாக்க வேண்டும் என BSNL ஊழியர் சங்கம் கேட்டுள்ளது. நிர்வாக அமைச்சகம் தேவையான ஒப்புதலை வழங்க BSNL நிறுவனம் ஏற்கனவே DOTக்கு எழுதியுள்ளதாக தெரிவித்த DIRECTOR(HR), DOTக்கு மேலும் ஒரு நினைவூட்டல் கடிதத்தை எழுதுவதாக தெரிவித்தார்.

2) **EPF நிலுவைத்தொகையில் ஊழியர்களின் பங்கீட்டை பிடிப்பதை நிறுத்த வேண்டும்**:- இது தொடர்பாக 11.05.2017 அன்று நடைபெற்ற தேசியக் கவுன்சில் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவு இது வரை அமலாகாததை BSNL ஊழியர் சங்கம் குற்றம் கூறியது. இதன் மீது GM(Estt) உடனடியக நடவடிக்கை மேற்கொள்வார் என DIRECTOR(HR) உறுதி அளித்தார். இது தொடர்பான EPF கமிஷனரின் கடிதத்தின் நகலை BSNL ஊழியர் சங்கம் நிர்வாகத்திற்கு வழங்க வேண்டுமென கேட்டுக் கொள்ளப்பட்டது.

3) **NEPP அமலாக்கத்தில் உள்ள பிரச்சனைகள்**:- நிறுவனம் கடுமையான நிதி நெருக்கடியை நோக்கி செல்வதாகவும், 2018 நிதி ஆண்டு கடுமையானதாக இருக்கும் எனவும் DIRECTOR (HR) தெரிவித்தார். அதன் காரணமாக கூடுதலான நிதிச்சுமை ஏற்படும் வகையில் எந்த ஒரு கோரிக்கையையும் ஏற்பது மிகுந்த சிரமம் என அவர் தெரிவித்தார். நிறுவனத்தின் நிதி நிலையினை கணக்கில் கொண்டு BSNL ஊழியர் சங்கத்தின் கோரிக்கைகளை GM(Estt) BSNL ஊழியர் சங்கத்துடன் விவாதிக்க அவர் வழிகாட்டினார்.

4) **TT தேர்வு எழுதிட உள்ள 10ஆம் வகுப்பு தகுதியினை ஒரு முறை தளர்த்த வேண்டும்**:- பத்து நாட்களுக்குள் தேவையான தகவல்களை மாநிலங்களிடம் இருந்து பெற GM(Estt)க்கு DIRECTOR(HR) வழிகாட்டியுள்ளார்.

5) **CATஉத்தரவின் அடிப்படையில் Sr.ACCOUNTANTகளுக்கு Group B அந்தஸ்து மற்றும் உயர் ஊதிய விகிதம் ஆகியவற்றை வழங்குக**:- BSNL ஊழியர் சங்கம் இந்த பிரச்சனையை தொடர்ந்து வலியுறுத்தி வந்துள்ளது. 31.10.2017 தேதியிட்ட DOTயின் கடிதத்தில், Sr.ACCOUNTANTகளுக்கு GROUP B அந்தஸ்து வழங்க வேண்டும் என BSNLக்கு தெரிவித்துள்ளது. Sr.ACCOUNTANTகளுக்கு உடனடியாக GROUP B அந்தஸ்தும், உயர் ஊதிய விகிதமும் வழங்க வேண்டும் என BSNL ஊழியர் சங்கம் வலியுறுத்தியது. இந்த கோரிக்கையினை அமலாக்க GM(FP) தேவையான வேகமான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என DIRECTOR(HR) தெரிவித்தார்.

6) **ஊழியர்களுக்கு 429 ரூபாய் திட்டத்தை அமலாக்குவது:-** இது தொடர்பான தேசிய கவுன்சில் கூட்டத்தின் முடிவு தொடர்பான தேவயான தகவல் ஒரு வார காலத்திற்கு முன் தான் தங்களிடம் வந்துள்ளதாக தெரிவித்த GM(Admn), இது தொடர்பாக பணிகள் நடைபெற்று வருவதாகவும், 10 நாட்களுக்குள் அதற்கான உத்தரவு வெளியிடப்படும் என்றும் தெரிவித்தார்.

7) **பெயர் மாற்றக் குழுவின் MINUTES:-** 26.09.2017 அன்று நடைபெற்ற பெயர் மாற்றக் குழுவின் வரைவு MINUTESல் நிர்வாகம் ஒரு சில விஷயங்களை நியாயமற்று இணைத்துள்ளது என BSNL ஊழியர் சங்கம் குற்றம் சாட்டியது. திருத்தப்பட்ட வரைவு MINUTES ஒரு வார காலத்திற்குள் வெளியிடப்படும் என DIRECTOR(HR) உறுதி அளித்தார்.

தேங்கியுள்ள பிரச்சனைகளுக்கு தீர்வு காண சாதகமான முடிவுகளை எடுத்த DIRECTOR(HR) மற்றும் அதிகாரிகளுக்கு BSNL ஊழியர் சங்கம் தனது நன்றிகளை தெரிவித்துக் கொண்டது.

**நேரடி நியமன ஊழியர்களின் ஓய்வூதிய பங்கீடு உயர்வு:-** நேரடி நியமன ஊழியர்களுக்கு ஓய்வூதிய திட்டத்திற்கான நிறுவனத்தின் பங்கினை அடிப்படை ஊதியம் மற்றும் DAவின் 3%லிருந்து 5%ஆக 01.04.2017 முதல் உயர்த்தி கார்ப்பரேட் அலுவலகம் 08.01.2018 அன்று உத்தரவு வெளியிட்டுள்ளது.

**வவுச்சருடன் கூடிய மருத்துவ திட்டத்தில் மாற்றம்:-** வவுச்சருடன் கூடிய மருத்துவ திட்டத்தினை 68.8% IDA விலிருந்து 78.2% IDAவிற்கு மாற்றும் போது 25 நாட்களில் இருந்து 23 நாட்களாக குறைத்து நிர்வாகம் தன்னிச்சையாக சமீபத்தில் ஒரு உத்தரவினை வெளியிட்டது. இந்த தன்னிச்சையான முடிவிற்கு BSNL ஊழியர் சங்கம் எதிர்ப்பு தெரிவித்திருந்தது. 08.01.2018 அன்று நடைபெற்ற கூட்டத்திலும் நமது கடுமையான எதிர்ப்பு பதிவு செய்யப்பட்டது. BSNL ஊழியர் சங்கத்தின் கோணத்தை ஏற்றுக் கொண்ட DIRECTOR(HR), இந்த கோரிக்கையை சாதகமாக பரிசிலீத்து முடிவெடுக்க உறுதி அளித்துள்ளார்.

**முதல் ஊதிய மாற்றத்தில் ஊதியத்தில் ஏற்பட்ட குழுப்பங்கள்:-** DOT கோரியிருந்த சில விவரங்களை BSNL நிறுவனம் வழங்காத காரணத்தால் இந்த் பிரச்சனை DOTயில் நீண்ட காலமாக தேங்கி கிடப்பதை நாம் நமது இணையதளத்தில் வெளியிட்டிருந்தோம். BSNL ஊழியர் சங்கத்தின் இந்த புகாரை கேட்ட DIRECTOR(HR), தேவையான விவரங்களை மாநிலங்களில் இருந்து பெற்று மேலும் காலதாமதமின்றி DOTக்கு அனுப்ப வேண்டும் என GM(Estt)க்கு அறிவுறுத்தினார்.

வாழ்த்துக்களுடன்,

தோழமையுள்ள,

**(A.பாபு ராதாகிருஷ்ணன்)**
**மாநில செயலாளர்**